## Bahagian A

## 15 நிமிடம்

## பிரிவு அ: புறவயக் கேள்விகள் – செய்யுளும் மொழியணியும்

## [10 புள்ளி]

வினாக்களுக்கு A,B,C,D எனும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. தூண்டல் பகுதி கொடுக்கப்பட்டிருந்தால் அதிலுள்ள விவரங்களைக் கூர்ந்து கவனித்து வினாக்களுக்கு **மிகச் சரியான** விடையைத் தெரிவு செய்க.

கேள்வி 1 முதல் 2 வரை **இரட்டைக்கிளவி** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

1. கீழ்க்காணும் **இரட்டைக்கிளவிக்குப்** பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.

| **சட சட** |
|---|

A. கடுமையான ஓசை

B. விரைவாகச் செல்லுதல்

C. அதிர்வு / நடுக்கம்

D. குளிர் / பயத்தினால் நடுங்குதல்

2. கீழ்க்காணும் வாக்கியத்திற்குப் பொருத்தமான **இரட்டைக்கிளவியைத்** தெரிவு செய்க.

| **வகுப்பில் எந்நேரமும் ______________________ வெனப் பேசிக் கொண்டிருந்த அகிலனை ஆசிரியர் கண்டித்தார்.** |
|---|

A. கிடு கிடு

B. நச நச

C. சட சட

D. தொண தொண



LIVEWORKSHEETS

கேள்வி 3 முதல் 4 வரை **இணைமொழி** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

3. கீழ்க்காணும் பொருளுக்கு ஏற்ற **இணைமொழியைத்** தெரிவு செய்க.

| **எண்ணத்திலும் செயலிலும்** |
|---|

A. சட்ட திட்டம்

B. தங்கு தடை

C. உயர்வு தாழ்வு

D. உள்ளும் புறமும்

4. கீழ்க்காணும் வாக்கியத்தில் கோடிட்ட இடத்திற்கு ஏற்ற **இணைமொழியைத்** தெரிவு செய்க.

| **திடீரெனத் தன் பெயரை அறிவித்து மேடைக்கு அழைத்தவுடன் வெட்கத்தில் அன்பரசி ________________________ மேடைக்குச் சென்றாள்.** |
|---|

A. வாடி வதங்கி

B. தங்கு தடை

C. நாணிக் கோணி

D. ஆடிப் பாடி

கேள்வி 5 **உவமைத்தொடர்** தொடர்பான வினாவுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

5. கீழ்க்காணும் சூழலுக்கேற்ற மிகச் சரியான **உவமைத்தொடரைத்** தெரிவு செய்க.

| **தான் காணச் சென்ற ஆசிரியர் மலர் ______________________ தன் எதிரே வந்ததும் நிர்மலா மனமகிழ்ந்தாள்.** |
|---|

A. பசுமரத்தாணி போல

B. கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல

C. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல

D. புற்றீசல் போல



LIVEWORKSHEETS

கேள்வி 6 முதல் 7 வரை **மரபுத்தொடர்** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

6. கொடுக்கப்பட்டுள்ள **மரபுத்தொடரின்** சரியான இணையைத் தெரிவு செய்க.

    A. எள்ளளவும் - பெரும் மனமகிழ்ச்சி அடைதல்
    B. பாட்டு வாங்குதல் - திட்டப்படுதல் / ஏசப்படுதல்
    C. உச்சி குளிர்தல் - கலந்து பேசுதல் / கூடிப் பேசுதல்
    D. அளவளாவுதல் - சிறிதளவும் / கிஞ்சிற்றும்

7. கீழ்க்காணும் **மரபுத்தொடருக்கேற்ற** மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்க.

| **வீடு வாசல்** |
|---|

A. குறைந்த சம்பளத்தில் வேலை செய்யும் மலேசியர்களுக்கு அரசாங்கம் வீடு மனை வாங்குவதற்கான பல திட்டங்களை வகுத்துள்ளனர்.
B. பல முயற்சிகளுக்குப் பிறகு பேச்சுப் போட்டியில் முதல் நிலையில் வெற்றி பெற்ற கலை பெருமகிழ்ச்சி அடைந்தாள்.
C. இக்கால கட்டத்தில் அதிகமான தமிழர்கள் புதிய வணிகத் துறையில் சிறிதளவும் பயமின்றி ஈடுபடுகிறார்கள்.
D. இசைக்கு ஏற்றவாறு ஆடும் அந்தப் பொம்மைதான் தனக்கு வேண்டுமெனப் பிடிவாதமாக இருந்த வேல்விழியை அப்பா திட்டினார்.

கேள்வி 8 **பழமொழி** தொடர்பான வினாவுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

8. கொடுக்கப்பட்டுள்ள சூழலுக்கேற்ற **பழமொழியைத்** தெரிவு செய்க.

| **கீதன் படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டுத் தீய நண்பர்களுடன் நட்புப் பாராட்டி வந்தான். ஒரு நாள் காவலர்கள் கீதனையும் அவனின் நண்பர்களையும் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்குச் சென்ற பின்னர்தான் அவனின் நண்பர்கள் ஒரு வீட்டில் திருடிய விவரம் தெரிய வந்தது.** |
|---|



LIVEWORKSHEETS

A. ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

B. மந்திரத்தால் மாங்காய் விழுந்திடுமா

C. ஆடமாட்டாதவள் கூடம் கோணல் என்றாளாம்

D. அடாது செய்பவன் படாது படுவான்

கேள்வி 9 **திருக்குறள்** தொடர்பான வினாவுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

9. கீழ்க்காணும் திருக்குறளில் விடுப்பட்ட அடியைத் தெரிவு செய்க.

| |
|---|
| **இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து** |
| **__________________________________(517)** |

A. தன்னையே கொல்லும் சினம்.

B. அதனை அவன்கண் விடல்.

C. சொல்லிய வண்ணம் செயல்.

D. இதனை இவன்கண் விடல்.

கேள்வி 10 **செய்யுள்** தொடர்பான வினாவுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

10. கீழ்க்காணும் செய்யுளில் விடுப்பட்ட அடியைத் தெரிவு செய்க.

| |
|---|
| **பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்** |
| **வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்** |
| __________________________________ |
| **தானே சிறியார் தொடர்பு** |

A. இடராழி நீங்குகவே யென்று.

B. சென்ற இடமெல்லாம் சிறப்பு.

C. சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை.

D. வானூர் மதியம்போல வைகலும் தேயுமே.



LIVEWORKSHEETS